# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை வரலாற்றுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, மே மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1998, மே மாதம் 29 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை வரலாற்றுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்துப்பட்டது.]

ச. வ. ஒ. 30/96

## இலங்கை வரலாற்றுச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

"இலங்கை வரலாற்றுச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தின் குறிக்கோள்களையும் அதனோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கு 1990 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதாதலாலும், முன்னுரை.

சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும்-கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும் ;

சொல்லப்பட்ட மன்றமானது அது கூட்டிணைக்கப்பட வேண்டுமென விண்ணப்பித்துள்ளதாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, இலங்கை வரலாற்றுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" என குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை வரலாற்றுச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை வரலாற்றுச் சங்கம்" எனும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் திருத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். இலங்கை வரலாற்றுச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2—டீ 042691 — 1,100 (97 /01)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இலங்கையின் வரலாற்றுக்கு விசேட முக்கியத்துவம் கொடுப்பதுடன் வரலாற்று ஆய்வுகளில் ஆராய்ச்சியைத் தொடக்கி வைத்தலும் ஊக்குவித்தலும் ;

(ஆ) இலங்கை வரலாற்றினதும் நாகரீகங்களினதும் ஒப்பீடு சார்ந்த மதிப்பீட்டு ஆய்வுகளைச் செய்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு நூல்நிலையங்களை ஏற்படுத்துதலும் ஏனைய சேவைகளை ஏற்பாடு செய்தலும், புத்தகங்கள், சஞ்சிகைகள், வரலாற்றுக் குறிப்புகள், தனிநூல்கள், பருவ வெளியீடுகள் என்பவற்றை அச்சிடுதலும் வெளியிடுதலும், விற்பனை செய்தலும் ;

(ஈ) வரலாற்று ஆய்வுகளுக்கும் விசேடமாக ஆசிய பண்பாடுகள், நாகரீகங்கள் என்பவற்றின் ஆய்வுக்கும் தங்களை அர்ப்பணித்துள்ள இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள ஒழுங்கமைப்புகளுடன் நட்புறவுத் தொடர்புகளை ஏற்படுத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் பொருட்காட்சிகள், விரிவுரைகள், மாநாடுகள், ஆய்வரங்குகள், கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றை ஒழுங்கு செய்தலும் ஊக்குவித்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைச் சார்ந்த விடயங்களின்மீது இலங்கையிலோ வெளிநாடுகளிலோ நடைபெறும் மாநாடுகளுக்குப் பேராளர்களை அனுப்பி வைத்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அதே குறிக்கோள்களையுடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் புலமைப்பரிசில்கள்மூலம் அல்லது பண அளிப்புகள்மூலம் உதவுதல் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான நிதிகளைத் திரட்டுதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமைவாக தலைவரையும் துணைத் தலைவர்களையும் கூட்டுத்தாபனத்தால் தெரிவுசெய்யப்படும் வேறு பதவியினர்களையும் வேறு ஒன்பது உறுப்பினர்களையும் கொண்ட பேரவை ஒன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய திகதியன்று பதவி வகிப்பதான சங்கத்தின் பேரவையாதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதிவேடு.

5. கூட்டுத்தாபனத்தின் பேரவை இச்சட்டம் தொடங்கும் திகதியில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராயிருக்கும் ஒவ்வோர் ஆளினதும் அல்லது நிறுவகத்தினதும் பெயர் பதியப்பட வேண்டியதான உறுப்பினர்களின் பதிவேடு ஒன்றை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் அல்லது சிறப்புப் பொதுக்கூட்டத்திலும் அத்துடன் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வது அகற்றுவது சம்பந்தமாகவும் பதவிதாங்குநர்களினதும் பேரவைகளினதும் உறுப்பினர்களின் தேர்தல் முறைக்கும் கூட்டுத்தாபனத்தின் பேரவையினதும், கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும், நம்பிக்கைப் பொறுப்பாளர்களினதும், முகவர்களினதும், சேவையாளர்களினதும் கடமைகளை நடாத்துவதற்காகவும் அலுவல்களைக் கையாள்

வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும் வேறுவகையில் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் பேரவையின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு முரண் இல்லாமல் இருக்கக்கூடியதான அத்தகைய விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.

7. கூட்டுத்தாபனத்தின் பேரவையானது கூட்டுத்தாபனத்தின் வரவுசெலவுகள் பற்றி முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், தகைமை பெற்ற கணக்காய்வாளரால் அல்லது கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான தனிசுகள்.

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய திகதியன்று மன்றத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினம் மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.

9. (1) சங்கமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை அல்லது குத்தகைச் சாதனத்தின் பயனைக் கொண்டு அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக் கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பயன்பெறும் சொந்தக்காரர் என்ற வகையிலாயினுஞ்சரி நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற வகையிலாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினும் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலக்கூடியதாகவும் தகுதியுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அத்தகைய ஏதேனும் ஆதனத்தை காலத்திற்குக்காலம் விற்க, ஈடுவைக்க, உரித்துமாற்றம் செய்ய, சாட்டுதல் செய்ய, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும் கூட்டுத்தாபனத்தின் பேரவையால் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கெனத் தீர்மானிக்கப்பட்ட வாறு அவசியமாகின்றவாறான அல்லது உசிதமாகின்ற வாறான அத்தகைய முறையில் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

10. கூட்டுத்தாபனத்திற்கு :

(அ) அதன் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தலும் கொள்ளுதலும் வாடகைக்கெடுத்தலும் நிருமாணித்தலும் வேறுவகையில் பெறுதலும் சட்ட முறையானதாதல் வேண்டும்;

(ஆ) அதன் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை கூட்டுத்தாபனத்தின் பேரவை பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறை யில் முதலீடு செய்தலும் காலத்துக்குக்காலம் அத்த கைய எவையேனும் முதலீடுகளை வேறுபடுத்தலும் மாற்றிவிடுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(இ) ஏதேனும் பிணைப்பொறுப்பொன்றின்மேல் அல்லது வேறுவகையில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக் காகப் பணத்தைத் திரட்டுதலோ அல்லது கடனாகப் பெறுதலோ அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பொருத்த மானதென எண்ணக்கூடியதான அத்தகைய முறை யில் ஏதேனும் தணிக்கை அல்லது கடப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது விடுவித்தல் சட்டமுறை யானதாதல் வேண்டும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஒப்பப் பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அத்துடன் எவ்வகையானவையுமான கொடைகளை பரிந்துகேட்டலும், திரட்டுதலும், பெறுதலும் சட்ட முறையானதாதல் வேண்டும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் தொடர்பிலான விடயங்கள் பற்றிய நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், கையெழுத்துப்பிரதிகள், ஆவணங்கள் என்பவற்றின் நூலகம் ஒன்றைத் தாபித்தலும் பேணு தலும்;

(ள) குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கென நிதிகளைத் தாபித்தலும் பேணுதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும் சேவையிலிருந்து நீக்குதலும் அல்லது சேவையை முடிவுறுத்தலும் கூட்டுத்தாபனத்தின் பேரவையால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் ஓய்வூதியங்களையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்தப்படுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் கடந்தகால அல்லது தற்போதைய அலுவல்களுக்கு அல்லது சேவையாளர்களுக்கு அல்லது அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் தங்கிவாழுநர்களுக்குப் பணிக்கொடைகளை, ஓய்வூதியங்களை, படிகளை அல்லது வேறு நலன்களை அளிப்பதற்கென ஏதேனும் நிதியத்தை அல்லது திட்டத்தைத் தாபித்தல் அல்லது அவற்றுக்கு உதவுதொகையளித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக எவரேனும் ஆட்களுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவுடன் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன் அல்லது உள்ளூர் அதிகாரசபையுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துகொள்ளுதல் சட்டமுறையானதாதல் வேண்டும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்தவாறும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் பேரவையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையில் அன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒப்பம் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறான தாதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை.

**12.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளை அல்லது பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காகக் கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கக்கூடியதான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைக்கப்படுவதன் மேல் எஞ்சியிருப்பதான ஆதனம்.

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பினும் அல்லது இருப்பவையும் ஆன வேறேதேனும் நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது அல்லது கலைக்கப்படுவதற்கு உடன் முன்னராகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.